**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு - 2023**

-----------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு**

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை**

| | **உரிய நியமத்தின் தொடர்படன் இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | உரித்து மாற்றங்கள் கூற்றினை தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் கணக்கீட்டு நியமம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்து சமர்ப்பிப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு இலக்கம் 01 இன் 79 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை சொத்துக்களுக்கு அவை அறிக்கையிடப்படும் திகதியில் 12 மாதங்களின் தீர்வயாகும் என உத்தேசிக்கப்படாத, பொதுவான செயற்பாட்டு சுற்றோட்டத்தில தீர்வையாவதற்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் உரித்தாகின்ற போதிலும் ரூபா 1,926,788 தொகையினை அறவிடுவதற்கு முடியாதிருந்த சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்களாக பதிவு செய்யப்படாது நடைமுறை அல்லாத சொத்துக்களாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 1,926,788 என்பது அறவிடப்பட முடியாத நடைமுறை சொத்து அல்ல என்பதுடன், இவை உடன்படிக்கை நிறைவடைந்த பின்னர் அந்த பணத்தை பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | தொடர்புடைய கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 01 இன் 80 (இ) ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து 12 மாதங்களினுள் தீர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் நடைமுறை பொறுப்புக்களாக இனம் காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 84,801,589 தொகையான பணிக்கொடை ஒதுக்கங்கள் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்பார்த்த காலங்களில் பிரகாரம் நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்களாக கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்காது நடைமுறை அல்லாத பொறுப்பாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 01 இன் 80 (இ) இன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | தொடர்புடைய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடைமுறை பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கழிவு பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் ஆகியவற்றை கழித்த பின்னர் ஒவ்வொரு வருடமும் அறிக்கையிடும் காலப்பகுதி நிறைவடையும் திகதிகளில் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முழுமையாக பெறுமானத்தை தேய்விடப்பட்டிருந்த ரூபா 36,457,088 பெறுமதியான கணினி, அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் ஆகிய சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய மதிப்பீட்டுப் வழுவானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் | இந்த வருடத்தினுள் மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு இந்த பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும், பட்டைய கணக்காளர் நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள Valuation Guideline இன் பிரகாரம் இது மேற்கொள்ளப்படக்கூடாது என தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தொடர்புடைய கணக்கிட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 11 இன் 44 ஆம் பந்தியின் பிரகாரம் அரசினால் வழங்கப்படும் மானியங்கள் 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் சொத்துக்கள் மற்றும் வருமானச் செலவினமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், ரூபா 10,300,000 தொகையான மூலதன மானிய பெறுவனவுகள் இந்த கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இணங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் மூலதனப் பெறுவனவுகள் ஒவ்வொரு வருடத்தினதும் Amortize செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மூலதன மானிய பெறுவனவுகளை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான தலைமை அலுவலகம் மற்றும் 85 மத்திய நிலையங்களில் காணப்பட்ட இருப்பு உருப்படிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழு இதுவரையிலும் நடைமுறை சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யவில்லை என்பதுடன் எதிர்வரும் வருடம் முதல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து இருப்பு உருப்படிகளின் பெறுமதிகளும் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். |

## 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 15,656,035 | கொள்வனவு செய்வதற்குரிய உறுதிச்சீட்டுகள், மதிப்பீட்டு அறிக்கைகள் | 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் சொத்துக்கள் பதிவேட்டில் காணப்படாததுடன், சொத்துக்கள் பதிவேட்டினை தயாரிக்கும் போது அதற்கு முன்னைய ஆண்டுகளில் இறுதிக் கணக்குகள் மற்றும் காசுப் புத்தகத்தை அடிப்படையாக கொண்டு அந்த தரவுகளை பெற்றுக்கொண்டிருந்த போதிலும், இது | நிலையான சொத்துக்களுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | தொடர்பில் தரவுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) களுத்துறை மற்றும் நீர்கொழும்பு மத்திய நிலையங்களில் கட்டிடங்களை திருத்துவதற்காக ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 426,547 முற்பணம் வழங்கப்பட்டு தற்போது 02 வருடங்கள் 9 மாதங்கள் முதல் 02 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இந்த முற்பணங்கள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், இந்த நிலையங்களின் திருத்தப்பணிகள் இன்னும் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை மத்திய நிலையத்தின் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக நீதி அமைச்சினால் ஆணைக்குழுவின் செலவின தலைப்பின் கீழ் அமைச்சிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளமை, நீர்கொழும்பு மத்திய நிலையத்தின் கட்டிடத்தின் பழுதுபார்த்தல் தொடர்பில் பேரேட்டு பதிவுகள் இந்த ஆண்டின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்க முடியும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. | முற்பணங்களை தாமதிக்காது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,428,014 தொகையான கடன் பட்டோர் மீதியினுள் 01-02 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 402,990 தொகையும், 02-03 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 707,008 தொகையும், 3-5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 67,251 தொகையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 230,500 தொகையுமாக கடன் பட்டோர் மீதியும் நிலவிய போதிலும், உரிய மீதிகளை அறவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 5 வருடங்களுக்கு மேற்பட்ட தொகையானது கம்பஹா கிளைக்காக செலுத்தப்பட்டு வைப்புகள் மற்றும் கிளைகளின் நடைமுறைக் கணக்குகளை திறக்கும் போது வைப்புச் செய்யப்பட்ட பணம் என்பதுடன், இது மீள பெற்றுக்கொள்ளப்படக்கூடிய வைப்புத் தொகைகளை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள இயலுமை உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | கடன் கொடுத்தோர் மீதிகளை தாமதிக்காது அறிவட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்படியாக ரூபா 2,390,922 தொகையான கடன் கொடுத்தோர் மீதியினுள் 01 வருடத்தை விட குறைந்த ரூபா 1,200,621 தொகையும், 1-2 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 513,019 தொகையான கடன் கொடுத்தோர் மீதியும், 3-5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 929 தொகையான மீதியும், 5 வருடங்களை விட அதிகமான ரூபா 676,353 தொகையுமாக கடன் கொடுத்தோர் மீதி காணப்பட்ட போதிலும் உரிய மீதிகளை கணக்குகளில் சீராக்குதல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளின் 1 முதல் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி இந்த வருடத்தினுள் செலுத்தப்படுவதுடன், 5 வருடங்களை விஞ்சிய மீதியானது ஆணைக்குழுவில் சேவையாற்றி விலகிச்சென்ற தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், காசோலைகள் பெற்றுக்கொள்ளப்படாத காரணத்தால் அந்த காசோலை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கபபட்டிருந்தது. | கடன் கொடுத்தோர் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1982 இன் 43 ஆம் இலக்க முத்திரை வரி அதிகாரச்சட்டம் | ரூபா 25,000 இனை விட அதிகமான கொடுப்பனவுகளுக்கு ரூபா 25 முத்திரை கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 26 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,529,961 பெறுமதியான கொடுப்பனவுகள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | எதிர்காலத்தில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தொடர்புடைய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அரச வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,748,671 தொகையான | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று நிலையான வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுட ன், பணிப்பாளர் சபையின் | தொடர்புடைய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையான வைப்புக்களுக்கு அதிகாரசட்டத்தின் பிரகாரம் நிதி அமைச்சரின் மற்றும் உரிய விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | கூட்டத்திற்கு இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (இ) | 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் 2(1) ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் பதவி நிலை உத்தியோகத்தர்களால் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தாபனவிதிக கோவையின் 15.1 (i) ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு வினைத்திறன் தடைகாண் பரீட்சை உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் ஆணைக்குழுவின் ஆரம்பம் முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் ஆரம்ப நிலை சேவை தொகுதிக்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வினைத்திறன் தடைக்காண் பரீட்சை நடாத்தப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டில் முதல் நிலை சேவை தொகுதிக்கு திறன் தடைக்கான் பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன், ஏனைய பதவிகளுக்கு 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டினுள் வினைத்திறன் தடைக்காண் பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | தொடர்புடைய தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | i. 110(1) | ஆணைக்குழுவினால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அழிவு நட்ட பதிவேடு ஒன்று பேணி செல்லப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் அழிவுநட்ட பதிவேடு ஒன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | ii. 139(4) | ரூபா 1,590,277 தொகையான 41 கொடுப்பனவு | 85 நிலையங்களுக்கு உரிய தலைமை அலுவலகத்திற்கு தபால் | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுதிச்சீட்டுகளுக்கு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய பற்றுசீட்டுகள் இணைக்கப்பட்டு இருக்கவில்லை. | மூலம் பற்றுசீட்டு மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், அந்த உறுதிச்சீட்டுகளை மத்திய நிலையங்களிலிருந்து கணக்காய்விற்கு அனுப்புவதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iii. | 237(ஆ) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் களஞ்சிய விநியோகங்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பொருள் கிடைத்துள்ளதாகவும், உரிய பொருட்பதிவேட்டில் மற்றும் இருப்பு புத்தகம் ஆகியவற்றில் அந்த பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ள தாகவும், சான்றிதழ் ஒன்று இணைக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் ரூபா 7,509,063 பெறுமதியான 45 கொள்வனவுகளில் மேற்படி ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | இதன் பின்னர் பொருள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக சான்றிதழ் குறித்த உறுதிச்சீட்டுக்களுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iv. | 237(அ)(1) | 2023 ஆம் ஆண்டில் ரூபா 1,958,476 பெறுமதியான வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் 39 பழுதுபார்த்தல்களுக்கு உரிய முறையில் பணி நிறைவு செய்யப்பட்டதற்கான சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளப்படா மல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந் தது. | மத்திய நிலையங்களின் பணிகள் அல்லது வழங்கல்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது திருப்திகரமான முறையில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதா க மற்றும் உரிய கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும் என மத்திய நிலையத்திற்கு பொறுப்பான சட்ட உத்தியோகத்தரால் இயந்திரத்திற்கு உரிய அட்டையில் சான்றிதழ் | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்படுகின்றமை, பிற்காலத்தில் இந்த அட்டையானது உரிய பணி நிறைவடைந்த பின்னர் பிரதி ஒன்று அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டு இருந்தது. | |
| **(ஊ) அரச நிதிச் சுற்றறிக்கை** | | | |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களுக்கு பிணை கட்டளை சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு நியதிச் சட்ட நிறுவனமொன்று என்பதால் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் அவற்றின் எல்லைகள் தொடர்பில் நீதி அமைச்சிடம் அறிவுரை கோரியுள்ளதுடன் அது கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(எ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | | |
| 2016 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | மூன்று வாகனங்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கு உரிய எரிபொருள் எரிவும் பரிசோதனை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஏ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | | | |
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி 2.3 பட்டோலை I இன் 3 (பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டிக் கோவை) | பிரதான பாதீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய எதிர்வுகூறப்பட்ட வருமான கூற்றுகள், எதிர்வுகூறப்பட்ட நிதி நிலைமைக்கூற்று மற்றும் எதிர்வு கூறப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள விதத்தில் மேற்கொள்ளுதல் கடினமானது என தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பந்தி | வற் வரியினை உள்ளடக்குவதற்கு பணம் செலுத்திய பின்னர் அதற்கடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அந்த கொடுப்பனவுகள் தொடர்பிலான விபரங்களின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,802,344 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 13,906,980 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,104,636 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வெளிநாட்டு உதவிகள் ரூபா 10,027,683 இனாலும், ஏனைய வருமானங்கள் ரூபா 1,740,276 இனாலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியின் அலுத்கடை கிளையில் பேணி செல்லப்படும் நடைமுறை வங்கிக் கணக்கின் 2023 ஜனவரி முதல் திசெம்பர் வரையிலான 12 மாத காலப்பகுதியினுள் ரூபா 17.4 மில்லியன் ரூபா 4.9 மில்லியன் வரையிலான வீச்சில் காணப்பட்டமையால் அந்த மிகை பணம் விளைவற்று காணப்பட்டது. | ‘‘வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்’’ இன் பெறுமதி கழிக்கப்பட்ட பின்னர் காசு புத்தகத்தின் பிரகாரம் மீதியானது கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள மீதியை விட குறைவானது என்பதை தெரிவிக்கப்பட்டிருந்தது. | விளைவற்ற முறையில் பணத்தை வைத்திருக்க கூடாது. |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.2.2 இன் பிரகாரம் சந்தை விலை ஒப்பிட்டு முறையில் விலை கேள்வி கோருவதற்கு ஆகக் குறைந்தது 07 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2023/2024 ஆண்டுகளுக்கு உரிய சுத்திகரிப்பு சேவைகளை வழங்கும் வருகையின் போது அமைப்பு குறிப்பீடுகளை தயாரிக்காது, விலைக்கேள்வி கோருவதற்கு குறைந்தது 03 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், 05 நாட்கள் கடந்த போதிலும் மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன், பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.6 ஆம் பந்திக்கமைய விலைக்கேள்வி திறத்தல் தொடர்பில் ஒரே மாதிரி பத்திரத்தில் அறிக்கையிடாததுடன், வழிகாட்டிக் கோவையின் 5.4.8 இன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் உரிய காலத்திற்கு செயலாற்றல் பிணைமுறிகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களிலிருந்து உரிய பெறுகைகள் வழிகாட்டி கோவையை பின்பற்றி சுத்திகரிப்பு சேவை வழங்குனர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 595,282 பெறுமதியுடைய தளபாடங்கள், புத்தக இராக்கைகள் மற்றும் மற்றும் டயர்களை கொள்வனவு செய்வதற்கு உரிய 09 பெறுகைகளின் விலைக்கேள்வி கோரப்பட்ட விதம் தொடர்பில் பெறுகைகள் கோவையில் இனங்காண | எதிர்வரும் வருடம் முதல் உரிய பெறுகைகள் வழிகாட்டி கோவையினை பின்பற்றி பெறுகையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. | பெறுகைகளுக்கு உரிய பணிகள் கோவைப்படுத்தப்பட்டு பேணி செல்லப்பட வேண்டும். |

முடியாதிருந்தது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பதவியணியில் 88 உத்தியோகத்தர்களின் அதாவது 24 சதவீதமான வெற்றிடங்கள் நிலவியதுடன், பணிப்பாளர் (சட்டம்) மற்றும் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) ஆகிய மூன்று பிரதான பணிகளும், ''முகாமைத்துவம்'' சேவை தொகுதிக்குரிய பிரதிப் பணிப்பாளர் (பிராந்திய) மற்றம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு நேரடியாக பங்களிப்பு செய்யும் பிரதிப் பணிப்பாளர் (நிதி) பதவியும் ''முகாமைத்துவ'' சேவை தொகுதிக்குரிய 26 சட்ட உத்தியோகத்தர் பதவிகளும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வெற்றிடமாக காணப்பட்டது. அறிக்கையின் திகதியளவில் இந்த வெற்றிடங்களை நிரப்புதல் 01 வருடம் 05 மாதங்கள் முதல் 05 வருடங்கள் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2022 ஆம் ஆண்டு முதல் பல்வேறு தடவைகளில் அங்கீகாரத்திற்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு இதுவரையிலும் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | தாமதம் இன்றி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் முகாமைத்துவத்திலிருந்து ஆரம்ப சேவை தொகுதியின் உத்தியோகத்தர்கள் வரையான ஒவ்வொரு உத்தியோகத்தர் தரத்திற்கும் ஏனைய தரம் வரையான பதவியுயர்வின் | 2023 ஆம் ஆண்டில் ஆரம்ப நிலை சேவை தொகுதிக்கு உரிய பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளது என்பதும், 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் ஏனைய பதவிகளுக்கும் செயற்திறமைகாண் தடை பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை | செயற்திறமைகாண் தடை பரீட்சைகளை உரிய முறையில் நடாத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| போது செயற்திறமைகாண் தடை பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்காமல் மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டுக்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிராததுடன், உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட உதவி ஆணைக்குழுவின் உள்ளக் கணக்காய்வு பணிகள் நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றமையும், எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தொடர்புடைய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். |